மாலை முரசு
பக்கங்கள் 15 + 2
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 26 சனிக்கிழமை 12.10.2024 | அதிர்வு 72

## திருமலையில் ரயில் மோதி தாயும் மகனும் உயிரிழப்பு!

திருகோணமலை – சீனக்குடா பகுதியில் ரயில் மோதி தாயும் மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்

# தமிழரசின் பதில் செயலாளர் உடன் பதவி விலக வேண்டும்

**ஊழல், மோசடி செய்து வடக்கு மாகாண சபையில் அமைச்சராக இருந்து இடைநிறுத்தப்பட்டவரே வன்னி வேட்பாளர் என சிவமோகன் குற்றச்சாட்டு**

(கி.வசந்தன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவி என்பது பொறுப்புமிக்கது. இன்று டம்மியான புல்லுருவிகளால் அந்தப் பதவி நாசமாக்கப்பட்டுள்ளது. கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு உடன் பதவி விலக வேண்டும்.” 02





# வல்வைப் பாலத்துக்கு அருகில் கோர விபத்து! யாழ். தம்ரோ நிறுவன முகாமையாளர் மரணம்!!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி, வல்வைப் பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற கோர விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக மரணமடைந்தார்.

இன்று சனிக்கிழமை காலை 9.45 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கோர விபத்தில் யாழ். தம்ரோ நிறுவனத்தின் முகாமையாளரே உயிரிழந்தார்.

வடமராட்சியில் இருந்து யாழ். நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் பழைய இரும்பு ஏற்றும் பட்டா ரக வாகனமும் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றது.

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையில் வசித்து தற்போது உரும்பிராயை வதிவிடமாகக் கொண்டவருமான துரைலிங்கம் மலைமகன் (வயது 38) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார். 03



## தமிழரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வலியுறுத்தினார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன்.

"வடக்கு மாகாண சபையில் ஊழல், மோசடி செய்ததால் அமைச்சரவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட சத்தியலிங்கம் தற்போது வன்னி மாவட்டத்தில் வேட்பாளராகக்

களமிறக்கப்பட்டுள்ளார்." – என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலை தொடர்பாக வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இம்முறை தேர்தலில் தமிழரசுக் கட்சி வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் ஆறு ஆசனங்களை வெல்லக்கூடிய சூழல் இருந்தது. ஆனால், இன்று சுயநலவாதிகளின் டம்மி விளையாட்டால் ஓர் ஆசனம் பெறுவதே பெரும் போராட்டமாக மாறியுள்ளது. எமது கட்சியின் தேர்தல் நியமனக் குழுவானது கடந்த 2018இல் தேர்வு செய்யப்பட்டது. அதில் சட்டத்தரணி தவராசா, சார்ள்ஸ் நிர்மலநாதன், ஈ.சரவணபவன், நான் உட்பட நான்கு பேர் அந்தக் குழுவில் இருந்தோம். இந்தநிலையில் திடீர் என நிகழ்ச்சி நிரல் இல்லாமல் எமது நான்கு பேரின் பெயர்களையும் வெட்டிவிட்டு புதிதாக சாணக்கியன், சேயோன், ரஞ்சினி ஆகியோர் சேர்க்கப்பட்டனர். இதனாலேயே இந்த மோசமான நிலை கட்சிக்கு ஏற்பட்டது.

### டம்மி விளையாட்டே இது

தான் மட்டும் வன்னியில் வெல்ல வேண்டும் என்ற தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரின் டம்மி விளையாட்டே இது. எனவே, பதில் பொதுச்செயலாளருக்கு எதிராக நான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளேன். இவர்களை இப்படியே விட்டால் கட்சிக்கு இன்னும் பல கேடுகளைச் செய்வார்கள். இவர்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

தோல்வியடைந்தவர்களை வேட்பாளராகப் போடுவதில்லை என்று கட்சி ஒரு போதும் முடிவெடுக்கவில்லை. அப்படி ஒரு தீர்மானம் பொதுக் குழுவிலும், மத்திய குழுவிலும் இல்லை. கட்சியை வெட்டிவிட்டு ஒரு சிலர் வெல்லலாம் என்பது மிகவும் மோசமான செயல். எப்படி இந்தச் சதிவேலையைத் திட்டமிட்டுள்ளார்கள் என்று பாருங்கள்.

### மாவை இராஜிநாமா

தலைவராக இருந்தும் நியாயமான முறையில் வேட்பாளர் நியமனங்களை செய்ய முடியவில்லை என்பதாலும், நியமனக் குழுவில் இருந்த ஏனையவர்களை இணைக்க முடியாமல் போனதாலும் மாவை சேனாதிராஜா கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகினார். நீ இங்கு வென்றால் மட்டும் காணும் நானும் யாழ்பாணத்தில் வென்றால் காணும் என்று சத்தியலிங்கமும், சுமந்திரனும் கருதுகின்றார்கள். தமிழரசுக் கட்சி அதுவல்ல. இவர்களால் இன்று ஒரு அணியே பிரிந்து சென்றுள்ளது. ஒருவரைத் தவிர இவர்கள் போட்ட அனைத்து வேட்பாளர்களுமே டம்மிகள். இவர்களால் எப்படி வெல்ல முடியும்?

### செயலாளர் பதவி தரம் தாழ்ந்தது

இன்று வன்னியில் புதிதாகப் போடப்பட்ட வேட்பாளரான ரவீந்திரகுமார் மாவட்டக் குழுவில் விண்ணப்பம் தராதவர். ஆஸ்ரேலியாவில் நிரந்தர வதிவுரிமை கொண்டவர்.

வேட்பாளராக என்னைத் தெரிவு செய்யுமாறு நான் ஒருபோதும் கோரவில்லை. எனக்குப் பதிலாக புதுக்குடியிருப்பு பிரதேச கிளையின் செயலாளரான விமலதாசையே நான் பரிந்துரை செய்தேன்.

கட்சியால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீறி இவர்கள் செயற்பட்ட விதமானது தமிழரசுக் கட்சியை இன்று கீழ்நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

பொதுச்செயலாளர் பதவி என்பது விட்டுக்கொடுப்புடன் அனைவரையும் அரவணைத்து ஒன்றாக இணைத்துச் செல்லும் ஒரு பதவி. தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றோர் இந்தப் பதவியினூடாக தங்களுக்குள்ளேயே விட்டுக் கொடுத்து செயற்ப்பட்டிருந்தனர். ஆனால், அந்தப் பதவி இன்று டம்மியான புல்லுருவிகளால் நாசமாக்கப்பட்டுள்ளது.

### தேசியப் பட்டியல் வழங்க விடோம்

தேர்தலில் போட்டியிட வரமாட்டேன் என்று சொல்பவர்களை வாருங்கள் தேசியப்பட்டியல் தருகின்றோம் என்று அழைக்கிறார்கள். இதுவா தேர்தல் நியமனக்குழுவின் வேலை. உங்களுக்குள்ளேயே பிரித்துக்கொள்ளவா இந்தக் குழுவைப் போட்டோம். தேர்தலில் போட்டியிட இருந்தவர்கள் நியமனக்குழுவில் இருந்து விலத்தியிருக்க வேண்டும் என்று கேட்டோம். அது நடக்கவில்லை. ஆனால், தேசியப் பட்டியல் ஆசனம் எக்காரணம் கொண்டும் தோற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

தோற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாவிட்டால் அதனை மட்டும் எப்படி கொடுக்க முடியும்? யாழ்பாணத்தில் தான் தோற்றால் தனக்கு ஒரு தேசியப் பட்டியல் என்று அங்கு ஒருவர், இங்கால ஒருவர் அது தனக்காம் என்கிறார். கட்சி என்ன றோட்டில் விக்கிற அப்பமா நீங்கள் பிய்த்துக் கொண்டு போறதுக்கு? பாதிக்கப்பட்ட மாவட்டத்துக்கே தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட வேண்டும்.

### மாகாண சபையில் ஊழல் செய்தார்

ஊழல்வாதிகளை அகற்றுவேன் என்றே அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்தார். தமிழரசுக் கட்சி தெரிவு செய்த வன்னி வேட்பாளர் சத்தியலிங்கம் ஊழல், மோசடிக்காரர். வடக்கு மாகாண சபையில் ஊழல் என்று சொல்லி நிரூபிக்கப்பட்டு முதலமைச்சரால் இடைநிறுத்தப்பட்டவர். பின்னர் நீதிமன்றத்துக்குச் சென்று தான் நியாயவாதி என்று இன்று வரை நியாயப்படுத்த முடியாதவர். இவர்தான் ஊழல்வாதிகள். அவர் வன்னியில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போடப்பட்ட மூவரும் ஏதோ ஒரு விதத்தில் அப்படியானவர்கள். ஒருவர் தேர்தல் கேட்பதற்கே பொருத்தமில்லாதவர். இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர். அவர் நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியுமா? அடுத்தவர் விடுதலைப் புலிகள் காலத்தில் ஊழல், மோசடிக்காக அடைத்து வைக்கப்பட்டவர். இன்னொருவர் பகிரங்கமாகவே ஊழல், மோசடியில் சிக்கியவர். இன்று அவர்கள் எல்லாம் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள். நல்லதே நடக்கட்டும். நிச்சயமாக நான் குற்றப்பத்திரிகையைத் தனித்தனியாக தாக்கல் செய்வேன்.

### செயலாளரால் நீதிமன்றத்துக்குச் சென்ற கட்சி

இன்று கட்சியானது சரியான தீர்மானம் எடுக்க முடியாமல் வழக்கில் சிக்கியுள்ளது. எதனால் அது? கட்சியின் மாநாடு நடப்பதற்கு முன்னர் அல்லது பொதுக்குழு கூடுவதற்கு முன்னர் ஆலோசனைக்கூட்டம் ஒன்று நடத்தப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தில்தான் பிரச்சினைகள் இல்லாமல் பொதுக்குழுவை எப்படி வழிநடத்துவது என்று தீர்மானிப்பது. பதவிகளில் யாரை போடலாம் என்பது தொடர்பாக ஆலோசனை செய்வதும் அந்தக் கூட்டதிலேயே. அதுவே ஆலோசனைக் குழுவின் பணி. அந்தக் கூட்டம் வாக்கெடுப்பிற்கு முதள்நாள் திரு

(03ஆம் பக்கம் பார்க்க)




## வல்வைப் பாலத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பட்டா ரக வாகனத்தின் சாரதியைக் கைது செய்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

சீனக்குடா பகுதியைச் சேர்ந்த ரன்மடு ஹேவகே நிஷாந்தி (வயது 47), அவரது மகன் ஷெஹான் ஜயம்பதி பெரேரா (வயது 10) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தந்தை கொண்டு வந்த உணவுப் பொதியை வாங்கிக்கொண்டு தாயும் மகனும் ரயில் பாதையைக் கடக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கல்ஓயாவிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலேயே இருவரும் மோதியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சீனக்குடா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழரசின்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோணமையில் நடப்பதாக இருந்தது. நாங்க அதற்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கும்போது தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சத்தியலிங்கம் ஐயா நிமோனியாவாலோ கொரோனாவாலோ படுத்துக்கிடக்கின்றார் என்றார்கள். அதனால் கூட்டம் இரத்தாகியது. அந்தப் பதில் செயலாளர் உண்மையில் சுகவீனமுற்றுத்தான் கூட்டத்துக்கு வரவில்லை என்றால் அவர் எந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்? அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரின் விபரங்களைத் தர வேண்டும். ஊடகங்களுக்குப் பொறுப்பு உள்ளது. நீங்கள் போய் அவரிடம் கேட்டுப் பாருங்கள். மக்களுக்கு அதனை வெளிப்படுத்த வேண்டும். அப்படி இல்லாதுவிடின் இது நடத்தப்பட்ட சூழ்ச்சி. அந்தச் சூழ்ச்சியினாலேயே அந்தத் தெரிவுகள் போட்டிக்குச் சென்றது. பின்னர் நிர்மூலமாக்கப்பட்டது.

**செயலாளரும், பேச்சாளரும் விலகினால்தான் விடிவு**

எனவே, பதில் செயலாளர் சகல பொறுப்புக்களையும் ஏற்று கட்சியை உருக்குலைத்ததையும் ஏற்றுக் கொண்டு இராஜிநாமா செய்யவேண்டும். அடுத்தது ஊடகப் பேச்சாளராக ஒருவர் இருப்பதாக இருந்தால் கட்சி எழுதிக்கொடுப்பதை மாத்திரமே சொல்ல வேண்டும். தனிப்பட்ட கருத்தை அவர் சொல்ல முடியாது. ஊடகப் பேச்சாளர் அந்தத் தர்மத்தை மீறியபடியால் அவரும் நீக்கப்பட வேண்டும். நாம் பயந்தவர்கள் அல்லர். இறுதி வரை தமிழரசுக் கட்சிக்கு உள்ளே இருந்து குரல் கொடுப்போம். உயிர் இருக்கும் வரை தமிழரசுக் கட்சியோடுதான் பயணிப்பேன்." - என்றார்



# மாமனார் தாக்கியதில் மருமகன் உயிரிழப்பு!

மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் மருமகன் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பலாங்கொடை – தஹமன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொட, தம்மானே பகுதியைச் சேர்ந்த 44 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குடும்பத் தகராறு காரணமாக மனைவியைத் தாக்கச் செல்லும்போது மனைவியின் தந்தை தடுக்க முயன்றபோது மேற்படி நபரைத் தாக்கியுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

மருமகனின் தலையில் அடிபட்டதன் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்றும் பலாங்கொடை பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 65 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பலாங்கொடை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் அரச நிறுவனத் தலைவர்கள் ஒன்றியம்

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுக்குள் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்களின் ஒன்றியம் என்னும் அமைப்பு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபயேவிக்ரம கலந்து கொண்டார்.

அமைப்பின் தலைவராக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மத் ஹனிபா மற்றும் அதன் செயலாளராக சிரேஷ்ட விவசாய போதனாசிரியர் எம்.டி.எம்.கரீம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள் எப்படும் பொது மக்கள் சார்ந்த பணிகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒன்றிணைந்த அடிப்படையில் வெற்றிகரமாக மேற்கொள்வது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகராக கடமை புரிந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற டாக்டர் எம்.எச்.எம்.ஆசாத் கௌரவிக்கப்பட்டார்.

# விருப்பு வாக்கின் பிரகாரம் வெற்றியடைந்தோர் தெரிவு

## மக்கள் சந்தேகமடையத் தேவையில்லை என்று தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**(கி.வசந்தன்)**

“நாடாளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்கின் அடிப்படையிலேயே வெற்றி பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே, அதில் மக்கள் சந்தேகமடையத் தேவையில்லை.” – என்று தேசியமக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ம.ஜெகதீஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், “அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய சக்தி மிக்க வேட்பாளர் அணி வன்னியில் களம் காண்கின்றது. அந்த வகையில் ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஊழல், மோசடி ஏனைய துஷ்பிரயோகங்கள் அற்ற நேர்மையான ஆட்சியை அமைப்பதற்கு நாங்கள் ஒன்று திரண்டுள்ளோம். மக்களின் ஆணைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

மக்கள் ஆணையைப் பெற்று சமாதானமாக – நிம்மதியாக வாழக் கூடிய ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவோம். இதேவேளை, ஊழல், மோசடி பேர் வழிகளை நிராகரிக்க வேண்டும் என்று மக்களிடம் அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

இன்று ஜனாதிபதியின் பெயரைக் கூறி பல சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன என்று போலிப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவரது கையை வலுப்படுத்தும் ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தி என்பதைக் கூறிக் கொள்கின்றேன். அவ்வாறானவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

அத்துடன் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் விருப்பு வாக்கு முறைமை பார்க்கப்படாது என்று கூறுவது போலியான ஒரு கருத்துருவாக்கமே. இம்முறை விருப்பு வாக்கின் அடிப்படையில்தான் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அது தொடர்பாக எமது செயலாளர் ரில்வின் சில்வாவும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மக்கள் அது தொடர்பாக எவ்வித சந்தேகமும் அடையத் தேவையில்லை. நிச்சயமாக கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.” – என்றார்.



# கற்பிட்டி விபத்தில் இராணுவச் சிப்பாய் பலி!

**(எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று இரவு கற்பிட்டி – பாலாவி பிரதான வீதியின் கரம்பைப் பாலத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஆனமடுவ தோனிகலைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இராணுவச் சிப்பாய் எனவும், அவர் புத்தளம் புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றி வந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்புக் கூறல் அவசியம்

இலங்கையில் அரச நிர்வாகம் சீரழிந்து போவதற்கும் ஊழல், மோசடி, பதவித் துஷ்பிரயோகம் போன்றவை தலைவிரித் தாடுகின்றமைக்கும் காரணம் - பிரதான காரணம் - பொறுப்புக்கூறும் பொறிமுறை சரிவர நடைமுறைப்படுத்தப்படாமை தான்.

அரச நிர்வாக முறைமைகளில் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் அல்லது ஒவ்வொரு செயற்றிறனின்மைக்கும் உரிய அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் என்ற கட்டாயம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்குமானால் பல்வேறு ஊழல், முறைகேடுகள், துஷ்பிரயோகங்கள் நடைபெறாமல் இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் அல்லது செயற்பாடின்மைக்கும் உரிய அதிகாரிகள் பொறுப்பும் பதிலும் கூறக் கடமைப் பட்டவர்கள் என்ற ஏற்பாடு முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கு மானால் அதிகாரிகள் தங்களுக்கு மேல் அரசியல்வாதிகள் தவறிழைக்கவும், சட்டவிரோத முறைகேடுகளில் ஈடுபடவும் இடம் அளித்திருக்க மாட்டார்கள். விடயத்துக்குத் தாங்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்ற கடப்பாடு அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டிருந்தால் அரசியல் வாதிகள் - அரசியல் தலைமைத்துவங்கள் - தம் இஷ்டப்படி அதிகாரிகளை ஆட்டி படிக்க படைக்க அதிகாரிகள் இடம் அளித்திருக்கவும் மாட்டார்கள்.

புதிதாகப் பதவியேற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் பிரதமர் இந்தப் பொறுப்பு கூறலை முழு அளவில் நடைமுறைப்படுத்த எத்தனிக்கிறார் என்பது முக்கிய விடயம். இது, அரச உயர் அதிகாரிகள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தினாலும் கூட, ஊழல், மோசடிக்கு - பதவித் துஷ்பிரயோகத்துக்கு - அவர்கள் துணை போகாமல் இருப்பதற்கான பாதுகாப்பு காவல் அரணாக அந்த கடப்பாடு அமையக் கூடிய வாய்ப்பு உள்ளது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் சரியான பிரயோசனம் மக்களுக்குக் கிடைப்பதற்கு அரச அதிகாரிகளே பொறுப்பு என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்திருக்கின்றார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களிலும், அரசாங்க அதிகாரிகளின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி உரிய தரப்பினருடன் நல்ல உரையாடலைக் கட்டியெழுப்பும் திறன் இருக்க வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அநுர தலைமையிலான அரசாங்கம் அரச சேவைகளில் இறுக்கமான நடைமுறைகளை கடைப்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசு தலைமைத்துவங்கள் - அரசியல் வாதிகள் - கொள்கை முடிவுகள், நிலைப் பாடுகளை எடுத்து அறிவித்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் பிரதான பங்களிப்பு அரச அதிகாரிகளுக்கு உண்டு.

இது தொடர்பில் அதிகாரபூர்வமாக தங்களுக்கு வழங்கப்படும் கடமைகளை அதிகாரிகள் ஒழுங்காக செய்ய வேண்டும். அது தொடர்பில் எழக்கூடிய விடயங்களுக்கு பொறுப்பு கூற வேண்டிய கடப் பாடு உடையவர்களாக அதிகாரிகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அத்தகைய நிலை ஒன்று பேணப்படுமானால் - தமது நிர்வாகத்தின் கீழ் இழைக்கப்படுகின்ற தவறுகள், குறைகளுக்கு அரசர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பு என்ற நிலைமை ஏற்படுத்தப் படுமானால் - விடயங்கள் வெற்றிகரமாகவும் உரிய முறையில் செயல்படுத்தப்படும் என நம்ப முடியும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களைப் பொறுத்த மட்டிலும் கூட தமிழர் தரப்புக் கோரும் நீதி அவ்விடயங்களில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டுங்கள் என்பது தான்.

பொறுப்புக் கூறல் கடப்பாடு கட்டாயப் படுத்தப்படாத சமூகம் உருப்படவே மாட்டாது என்பதே உண்மை.

# மன்னார் சதொச மனிதப் புதைகுழி எச்சம் பகுப்பாய்வுக்குக் கொழும்புக்கு

(வாஸ் கூஞ்ஞ, மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)






கடந்த ஆறு வருடங்களுக்கு முன் மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் பிற பொருள்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளன என்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக இந்த வழக்கில் முன்னலையாகிவரும் சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் தீவின் நுழைவாயில் பகுதியில் 2018 ஆம் ஆண்டு சதொச வர்த்தக நிலைய கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இந்தக் கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டு இவ்விடத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கும் அகழ்வு பணிகள் இடம்பெற்றன.

இதில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் பிற பொருள்கள் சேகரிக்கப்பட்டு மன்னார் நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்பொழுது இவற்றின் மாதிரிகள் பகுப்பாய்வுக்காக எடுத்துச் செல்லப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாகக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக இவ் வழக்கில் முன்னலையாகி வரும் சிரேஷ்ட சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவிக்கையில்,

மன்னார் நீதிவான் நீதிமன்றில், மன்னார் நகர் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட சதொச மனித புதைகுழியில் மீட்கப்பட்ட பொருள்களை கடந்த திங்கள்கிழமை (07) தொடக்கம் நேற்று வெள்ளிக்கிழமை (11) வரை தரம் பிரிக்கும் செயற்பாடுகள் நடைபெற்றது.

ஏற்கனவே இந்த புதைகுழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக் கூட்டுத் தொகுதியோடு காணப்பட்ட வேறு பொருள்கள் பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றின் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பகுப்பாய்வுக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றன.

பல வருடங்களுக்குப் பின்னர் இந்த ஐந்து நாள்களும் பேராசிரியர் ராஜ் சோமதேவா குழுவினரும் சட்டவைத்திய அதிகாரி குழுவும் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல். எம்.சாஜித் முன்னிலையில் காணாமல் போன அலுவலக அலுவலர்களும் , பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஆஜராகி வரும் சட்டத்தரணிகளும் , நீதிமன்ற அலுவலர்களும் இணைந்து தரம் பிரிக்கும் செயல்பாடுகள் இடம்பெற்றன.

கண்டுபிடிக்கப்பட்ட எழும்புக் கூடுகள் தனியாகவும் அதனோடு கண்டுபிடிக்கப்பட்ட பிறபொருள்கள் தனியாகவும் பிரித்தெடுக்கப்பட்டு இவை பொதி செய்யப்பட்டுப் பாதுகாப்பாக நீதிமன்றில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக விடயங்களாக இந்த மனித எழும்புக் கூடுகள் தொடர்பாக சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கைகளும் மனித புதைகுழியில் கண்டு பிடிக்கப்பட்ட பிற பொருட்கள் தொடர்பாகவும் முள்ளாள் களனி பல் கலைக்கழக பேராசிரியர் ராஜ்சோம தேவாவின் தொல்பொருள்களின் அறிக்கையையும் நீதமன்றம் கோரி நிற்கின்றது.

ஆகவே இவர்கள் இது தொடர்பாக எதிர்வரும் புதன்கிழமை (16) மன்னார் நீதிவான் நீதிமன்றில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் போது இது தொடர்பாக முடிவு எடுக்கவுள்ளனர்.

ஆகவே இவர்கள் உரிய சான்றுப் பொருள்களைத் தங்கள் நிறுவனங்களுக்கு கொழும்புக்கு எடுத்துச் செல்லப் பட்டு இவற்றை அகழ்வு ஆராய்ச்சி செய்து இவைகள் எக்காலப் பகுதிக்கு உரியவை என்றும் இறப்புக்குக்கான காரணம் வயது, பால் போன்ற விடயங்கள் சம்பந்தமான அந்தலபோலஜி அறிக்கையையும் நீதிமன்றில் சமர்பிப்பார்கள்எனவும்எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இதற்கான கால அவகாசமும் எதிர்வரும் புதன்கிழமை (16) மன்னார் மாவட்ட நீதிவான் நீதமன்றில் இவ் வழக்கு எடுக்கப்படுகின்றபோது தெரிவிக்கப்படும் .– என்றார்.

இதே வேளையில் கடந்த புதன் கிழமை (09) மன்னார் சதொச மனித புதைகுழி அமைந்துள்ள அண்டிய ஒரு சில இடங்கள் நீதிவான் முன்னிலையில் பேராசிரியர் ராஜ்சோமதேவாவின் தலைமையில் அகழ்வு செய்து பரிசோதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இசையும் உதவியும்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், பிரதி வெள்ளிக்கிழமைகளில் இடம் பெறும் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பஞ்சபுராண ஓதுதலுடன் ஆரம்பமான நிகழ்வில் கலாவித்தகர் குணராசா நக்கீரனின் குழலும், குரலும் என்ற தெய்வீக இன்னிசை விருந்தில் குரல் இசை பாடலும் புல்லாங்குழல் இசையும் இடம்பெற்றன.

இதில் வயலின் இசையை நுண்கலைமாணி இராசரத்தினம் நிரோஜனும், கீபோட் இசையை இன்னிசைக் கலைமணி நடேசு செல்வச்சந்திரனும் மிருதங்க இசையைக் கலாவித்தகர் வரதராஜசர்மா ரமணசர்மாவும் வழங்கினர்.

இதில் உதவித் திட்டங்களாக அச்சுவேலி மத்திய கல்லூரியில் தரம் 07 இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கும், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த நல்லூர் ஸாதனா பாடசாலையில் தரம் – 07 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் சம்மாந்துறை வலயத்திற்கு திடீர் விஜயம்!





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க சம்மாந்துறை மற்றும் கல்முனை வலயங்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனைக்கு விஜயம் செய்த அவர் சகல பிரிவுகளுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் தலைமையிலான கல்வி பணிப்பாளர்கள் அவருக்கு விளக்கமளித்தனர்.

பணிமனையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த மற்றும் கட்டுமான வேலைகள் தொடர்பாகவும் பார்த்து, கேட்டறிந்தார்.

அதேவேளை, கல்முனை வலயக் கல்விப் பணிமனைக்கும் விஜயம் செய்து வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீமைச் சந்தித்து கேட்டறிந்தார்.

அதேவேளை சிங்கள மகா வித்தியாலயம் விபுலானந்த வித்தியாலயம் போன்ற ஒருசில பாடசாலைகளுக்கும் விஜயம் செய்தார்.



# மன்னார் குருவில்வானில் இராணுவத்தால் வீடமைப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குருவில் வான் கிராமத்தில் வறிய குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தால் அமைக்கப்பட்ட புதிய வீடு இன்று சனிக்கிழமை (12) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 10 ஆவது கெமுனு கோவா படைப் பிரிவால் அமைக்கப்பட்ட குறித்த வீட்டின் திறப்பு விழா தள்ளாடி 54 ஆவது படைப் பிரிவு கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர்.பி.ஏ. ஆர்.பி ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இந்த வீட்டை இராணுவத்தின் வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜே.பி.சி.பீரிஸ் வைபவ ரீதியாக திறந்து வைத்து உரிமையாளரிடம் கையளித்தார்.

தொடர்ந்து வீட்டு வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றது. பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.









# 7 உறுப்பினரைத் தெரிவு செய்ய 640 பேர் இம்முறை களத்தில்!

## 64 குழுவினருடன் அம்பாறை மாவட்டம் சாதனை

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஏழு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள்.

இந்த முறை 50 சுயேட்சைகள் 22 கட்சிகள் அடங்கலாக 72 குழுக்கள் தமது வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தன.

இருப்பினும் வெள்ளிக்கிழமை இறுதி நேர கூட்டத்தில் 64 குழுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்தக அபேவிக்ரம அறிவித்தார்.

இந்த முறை நாடாளுமன்ற தேர்தலில் இலங்கையில் அதிகூடிய 64 குழுக்கள் போட்டியிடுவது அம்பாறை மாவட்டத்திலாகும்.



எட்டுக் குழுக்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் தற்போது 20 கட்சிகளும் 44 சுயேச்சை குழுக்களும் களத்தில் குறித்துள்ளன.

2024 பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் 690 குழுக்கள் போட்டியிடப் போகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

74 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஏதேனும் அநீதிகள் இடம்பெற்றுள்ளதாக உணர்ந்தால் அந்தக் குழுக்கள் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான அரசியல் குழுக்கள் போட்டியிடுகின்றன. அதன் எண்ணிக்கை 64 ஆகும்.

மொனராகலை மற்றும் பொலன்னறுவை தேர்தல் மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் போட்டியிடுகின்றன. அங்கு தலா 15 அணிகள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 12 மாணவிகள் தாக்கப்பட்டுள்ளனர்; ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு!

(மஸ்கெலியா)

நுவரெலியாவில் பிரபல மகளிர் பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் 12 மாணவிகள் தலைமை ஆசிரியை ஒருவரால் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்டுள்ளார். இதற்கு நீதி வழங்குமாறு பெற்றோர்கள் நுவரெலியா பொலிஸ் நிலையம் மற்றும் கல்வி திணைக்களம் ஆகியவற்றில் முறையிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளான 12 மாணவிகளில் ஒரு மாணவி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த மாணவிகளுக்குப் பாடசாலை நிறைவடைந்த பின் மாலை நேர மேலதிக வகுப்புகள் நடத்தப்படுவது வழமை.

இந்த வகுப்புகளில் பங்குபற்றியிருந்த மாணவிகள் பகல் உணவு உண்டபின் கைகளை கழுவச் சென்று, வகுப்பறைக்குத் திரும்பக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர்களை ஆசிரியை தாக்கித் தண்டித்துள்ளார் என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் தாக்குதலுக்கு உள்ளான மாணவிகளில் ஒரு மாணவிக்கு முதுகு மற்றும் கால்களில் தாக்குதல் பலமாகியுள்ள நிலையில் அம் மாணவி நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது பிள்ளைக்கு நேர்ந்த கதியால் ஆத்திரம் கொண்ட பெற்றோர், பிள்ளைக்கு நீதி கோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதேநேரத்தில் பொலிஸில் முறைப்பாடு செய்த பின்னர், நேற்றுக் (11) காலை, நுவரெலியா கல்வித் திணைக்களத்திலும் முறையிட்டுள்ளனர்.

பின்னர், இந்த சம்பவத்தை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தி நீதி வழங்கப்பட வேண்டும் என்று பெற்றோர் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் நீதியான விசாரணையை முன்னெடுத்துத் தீர்வை பெற்றுதருவர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

# புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் 24 கட்சிகள், 15 சுயேட்சை குழுக்கள்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக புத்தளம் மாவட்டத்தில் 08 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களைத் தெரிவு செய்வதற்கு 663,673 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று (11) நண்பகல் 12 மணிவரை புத்தளம் மாவட்ட செயலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அதன்படி 26 அரசியல் கட்சிகளும், 18 சுயோட்சைக் குழுக்களும் அடங்களாக மொத்தம் 44 கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தன.

இதில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளான சிங்கள தீப ஜாதிக பெரமுன மற்றும் சமபீம கட்சி ஆகிய இரண்டும் மீரா மொஹைதீன், செய்னுதீன் மரைக்கார் இல்ஹாம், மற்றும் ஜீ.ஜீ.எல்.எஸ் பிரசன்ன ஆகியோர்களின் தலைமையிலான சுயோச்சை குழுக்கள் மூன்று அடங்களாக ஐந்து வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

24 அரசியல் கட்சிகள் மற்றும் 15 சுயேட்சை குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று புத்தளம் மாவட்ட செயலாளரும், புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான எச்.எம்.எஸ்.பி. ஹேரத் தெரிவித்தார். இதன்படி இம்முறை புத்தளம் மாவட்டத்தில் 08 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 429 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அம்பாறை தமிழரசுக்கு மூன்று தமிழர்கள் சமர்ப்பித்த ஆட்சேபனை மனு நிராகரிப்பு

( வி.ரி. சகாதேவராஜா)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக மூன்று தமிழர்கள் சமர்ப்பித்த ஆட்சேபனை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வேட்புமனு ஆட்சேபனை மற்றும் பரிசீலனை கூட்டத்தில் இந்த ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

தமிழர்களான செ.இராசையா, த. தர்மேந்திரா, கே.துஷனந்த் ஆகிய மூவரும் இந்த ஆட்சேபனை மனுக்களைத் தெரிவித்து இருந்தனர்.

அதனை பரிசீலித்த மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையிலான குழுவினர் அதனை நிராகரித்தனர்.

அதன் வாயிலாக இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்புமனு போட்டியிடுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.






# அகில இலங்கை உதைபந்தாட்டப் போட்டி; கற்பிட்டி அல் அக்ஸா அணி முதல் வெற்றி!

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்,).**

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தட்ட போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 20 வயதுக்கு உட்பட்ட உதை பந்தாட்ட அணி முதல் போட்டியில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அநுராதபுரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (11) இடம்பெற்ற இப்போட்டியில் தேசிய ரீதியில் பலம் பொருந்திய மாவனல்ல சாஹிரா தேசிய பாடசாலையின் உதைபந்தாட்ட அணியை 2:1என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# 21 அரசியல் கட்சிகள், 43 சுயேட்சை குழுக்களின் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன!

## அம்பாறை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகளதும் 43 சுயேட்சை குழுக்களதும் நியமன பத்திரங்கள் ஏற்றுகொள்ளப்பட்டன என்று மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் சிந்தக அபேவிக்ரம குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (11) ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 5 லட்சத்து 55 ஆயிரத்து 432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் 2024 ஆண்டுக்கான பொதுத் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 07 ஆசன தெரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகளதும் 50 சுயேட்சைக் குழுக்களதும் நியமனப்பத்திரங்கள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அத்துடன் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியும் 07 சுயேட்சைக்குழுக்களையும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய பல வேறு குறைபாடுகளை கருத்தில் கொண்டு நிராகரித்துள்ளோம். இதன்படி தற்போது அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகள் 43 சுயேட்சைக் குழுக்களது நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

2024 ஆண்டு பொதுத் தேர்தல் அறிவித்த பின்னர் அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றதும் அமைதியானதுமான தேர்தல் செயற்பாடுகள் நடைபெற்று கொண்டு வருகின்றன.

பெரியளவிலான வன்முறைகள் எவையும் இடம்பெறவில்லை.எனினும் சிறு சம்பவங்கள் தேர்தல் கண்காணிப்பு ஊடாகக் கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

வன்முறையற்ற நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவினரும் தெரிவத்தாட்சி அலுவலரான நானும் பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.- என்றார்.




# சரக்கு ரயில்- பயணிகள் ரயில் மோதி விபத்து: 5 பேர் கொண்ட விசாரணைக் குழு நியமனம்

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை அருகே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது பாக்மதி விரைவு ரயில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து குறித்து விசாரிக்க, 5 உயரதிகாரிகளை கொண்ட உயர்மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ஆய்வு செய்து, ரயில்வே துறையிடம் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது.

கர்நாடக மாநிலம் மைசூரில் இருந்து பிஹார் மாநிலம் தர்பங்காவுக்கு சுமார் 2,000 பயணிகளுடன் நேற்றுக் காலை 10.30 மணிக்கு பாக்மதி அதிவிரைவு ரயில் புறப்பட்டது. இந்த ரயில் ஜோலார்பேட்டை, அரக்கோணம், பெரம்பூர் வழியாக கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் 90 கிலோ மீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

இந்த ரயில் வெள்ளிக்கிழமை இரவு 8.27 மணி அளவில், திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை ரயில் நிலையம் அருகே சென்று கொண்டிருந்த போது, திடீரென அங்கு ஏற்கெனவே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது. இதில், அந்த ரயிலின் 12 பெட்டிகள் வரை தடம்புரண்டன. மேலும் ரயிலின் பார்சல் பெட்டியில் அடிப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது.

இது குறித்து ரயில்வே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலின் பேரில் ரயில்வே அதிகாரிகள், திருவள்ளூர் மாவட்ட அரசு அதிகாரிகள், ரயில்வே போலீஸார், ஆர்.பி,எப். பொலிஸார் , பேரிடர் மீட்பு குழுவினர் அங்கு விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தில், அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. அதேநேரத்தில் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தடம்புரண்ட பெட்டிகளில் இருந்து காயமடைந்த பயணிகளை மீட்டு, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுதவிர, 3 பயணிகள் ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், கவரைப்பேட்டை அருகே திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த பயணிகளை பஸ்கள் மூலமாக, பொன்னேரி நிலையத்துக்கு அழைத்து சென்றனர். அங்கிருந்து இரண்டு மின்சார ரயில்கள் மூலமாக சென்ட்ரலுக்கு அழைத்து சென்றனர். தொடர்ந்து, சென்டரல் ரயில் நிலையத்தில் இருந்து இன்று அதிகாலை இந்த பயணிகளை சிறப்பு ரயிலில் தர்பங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்த 5 உயரதிகாரிகளை கொண்ட குழுவை தெற்கு ரயில்வே அமைத்துள்ளது. இதில் இயந்திரவியல், இயக்கவியல், தண்டவாள பராமரிப்பு துறை, சிக்னல் மற்றும் தொலைதொடர்பு, ரயில்வே பாதுகாப்பு பிரிவு ஆகிய துறைகளை சேர்ந்த உயரதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

விபத்துக்கு சிக்னல் தொழில் நுட்ப பிரச்னையா அல்லது மனித தவறா, வேறு ஏதும் காரணமா என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்க உள்ளனர். மேலும், ரயில்வே பொலிஸாரும் வழக்குப் பதிந்து,விசாரணையை தொடங்கி உள்ளனர்.







# இன்னும் எத்தனை குடும்பங்கள் அழிய வேண்டும்? ரயில் விபத்தை சுட்டிக்காட்டி ராகுல் காந்தி கேள்வி

அரசு விழித்துக் கொள்ளும் முன் இன்னும் எத்தனைக் குடும்பங்கள் அழிய வேண்டும் என்று மைசூரு தார் பங்கா ரயில் விபத்தை சுட்டிக் காட்டி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"மைசூரு – தார்பங்கா ரயில் விபத்து பாலாசோர் விபத்தின் கோரத்தை நினைவூட்டுகிறது. ஒரு பயணிகள் ரயில் நின்றிருந்த சரக்கு ரயில் மீது மோதியுள்ளது. ஏற்கெனவே இதுபோன்ற விபத்துகளில் நிறைய உயிர்ப்பலிகள் ஏற்பட்டுவிட்டன.

அவற்றிலிருந்து கற்றுக் கொள்ளப் பட்ட பாடம் என்ன?. பொறுப்பேற்பு மேலிருந்தே தொடங்க வேண்டும். அரசு விழித்துக் கொள்ளும் முன்னர் இன்னும் எத்தனை குடும்பங்கள் இதுபோன்று அழிய வேண்டும்." என்று கேள்வி எழுப்பியுள்ளார்.



# விபத்துகளை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கோரிக்கை

கவரப்பேட்டை அருகே ரயில் விபத்தால் பாதிக்கப்பட்டு சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து விசாரித்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ரயில் விபத்துகளை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சென்னை ஸ்டாலின் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பயணிகளை இன்று சந்தித்து நலம் விசாரித்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமைச்சர், எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மாநில அரசு சார்பில் 22 ஆம்புலன்ஸ்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன.

எந்த உயிரிழப்பும் இல்லை. ஸ்டான்லி மருத்துவமனையில், மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து நடந்த இடத்தில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை, மாவட்ட நிர்வாகம், மருத்துவக் குழுவினர் உள்ளனர்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து மீட்பு பணியை கண்காணித்து வருகிறார். ரயில் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது தொடர்ச்சியாக விபத்துக்கள் நடக்கின்றன."– என்றார்.






# உலகில் 8 பெண்களில் ஒருவருக்கு 18 வயதுக்குள் பாலியல் துன்புறுத்தல்

## ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டது

உலகம் முழுவதும் உள்ள 8 பெண்களில் ஒருவர் 18 வயதை அடைவதற்கு முன் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு ஆளாகின்றனர் என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேசப் பெண் குழந்தைகள் தினம் நேற்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி ஐக்கிய நாடுகள் சபை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன்படி, உலகில் தற்போதுள்ள பெண்களில் 37 கோடி பேர் (8 இல் ஒருவர்) பாலியல் துஸ்பிரயோகம் அல்லது துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர் என்ற அதிர்ச்சி புள்ளிவிவரத்தை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.

உடல் ரீதியாக அல்லாது, இணையவழியில் 65 கோடி பெண்கள் (5 இல் ஒருவர்) துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆப்பிரிக்காவில் 7.9 கோடி பெண்களும், கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் 7.5 கோடி பெண்களும், மத்திய மற்றும் தெற்கு ஆசியப் பகுதிகளைச் சேர்ந்த 7.3 கோடி பெண்களும், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் 6.8 கோடி பெண்களும் லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபிய பகுதிகளில் 4.5 கோடி பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் அரசியல் நிலைத்தன்மை அற்ற சூழலால் ஏறடபட்டுள்ள நாடுகளில் அதிக அளவிலான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அகதி முகாம் பகுதிகளில் தங்கியுள்ள 4 பெண்களில் ஒருவர் அங்கு வருவதற்கு முன் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

பாதிக்கப்படும் பெண்களில் 14 முதல் 17 வயதுடைய சிறுமிகளே அதிகம்.

ஒருமுறை துன்புறுத்தலுக்கு ஆளான சிறுமிகளே மீண்டும் மீண்டும் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடுவதால் அதன் மனரீதியான மற்றும் உடல் ரீதியான தாக்கம் அவர்களை விட்டு நீங்குவதே இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மன அழுத்தம், மனச் சோர்வு, பாலியல் ரீதியாகப் பரவும் தொற்றுநோய்கள் உள்ளிட்டவற்றால் அவதியுறும் இவர்கள், போதைப்பொருள் துஷ்பிரயோகத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகள் மட்டுமல்லாது ஆண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 24 முதல் 31 கோடி பேர் 18 வயதுக்கு முன்னர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.





# ஈரானின் எண்ணெய் வர்த்தகக் கப்பல்களுக்கு பொருளாதாரத் தடை விதித்தது அமெரிக்கா

ஈரானின் எண்ணெய் வர்த்தகம் மற்றும் அது சார்ந்த கப்பல்களுக்கு அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இஸ்ரேலில் உள்ள இராணுவ தளங் களை இலக்கு வைத்து ஈரான் அண் மையில் நடத்திய தாக்குதலுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்தப் பொருளா தாரத் தடை அறிவிக்கப்படுவதாக அமெ ரிக்கா தெரிவித்துள்ளது.

தெஹ்ரானிஸ் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே, பெய்ரூட்டில் ஹெஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா மற்றும் ஈரான் இராணுவத் தளபதி ஆகியோர் கொல்லப்பட்டமைக்கு பதிலளிக்கும் வகையில் ஈரான் கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

இந்த நிலையில், ஈரானின் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் வகையில் புதிய பொருளாதாரத் தடை அறிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் அண்டனி பிளிங்கன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 02
கனடா முரசு
சனிக்கிழமை 12/10/2024

## பிரம்டனில் ஒருவர் மர்ம மரணம் பொலிஸார் தீவிர விசாரணை

கனடாவில் பிரம்டன் பகுதியில் நபர் ஒருவர் சந்தேகத்திற்கு இடமான வகையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 02

# ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்ட கனடியருக்கு அமெரிக்க நீதிமன்றத்தால் சிறை தண்டனை




**ஆள் மாறாட்ட மோசடியில் ஈடுபட்ட கனடிய பிரஜை ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.**

**பிரிட்டிஷ் கொலம்பியாவின் கொலவ்னா பகுதியைச் சேர்ந்த 27 வயதான நபர் ஒருவருக்கு இவ்வாறு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.**

**அமெரிக்க மொன்டெனா மாவட்ட நீதிமன்றம் மேற்படி நபருக்கு 18 மாதங்கள் சிறை தண்டனை விதித்துள்ளது.**

**போலி பெயர்களை பயன்படுத்தி இந்த நபர் அமெரிக்காவில் துப்பாக்கிகளை கொள்வனவு செய்துள்ளார்.**

பல்வேறு நபர்களின் பெயர்களை பயன்படுத்தி இவ்வாறு துப்பாக்கிகளை கொள்வனவு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் விற்பனை செய்யும் நோக்கில் இவ்வாறு துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

ஆயுத கொள்வனவின்போது போலி தகவல்களை வழங்கியதாக அந்த நபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதன் அடிப்படையில், அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டதுடன் 10 ஆயிரம் டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபரிடமிருந்த 12 ஆயுதங்களை கையகப்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.இவ்வாறான நபர்களே சட்டவிரோத ஆயுத கலாச்சாரத்தை உருவாக்குகின்றனர் என நீதிமன்றம் குற்றம் சுமத்தியுள்ளது.

# கனடாவில் அதிசொகுசு வாகனங்களை திருடிய மூவர் கைது செய்யப்பட்டனர்



கனடாவில் ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் சுமார் 1.5 மில்லியன் டொலர் பெறுமதியான ஆடம்பர வாகனங்களை கொள்ளையிட்ட சந்தேகத்தின் பேரில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடமிருந்து வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பீல் பிராந்திய பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் வாகனங்களை கடத்துவதுடன், இரவு நேரங்களில் வீடுகளை உடைத்து பொருள் கொள்ளையிலும் ஈடுபட்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர்கள் ஆடம்பரமான 13 வாகனங்களை கொள்ளையிட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் தொடர்பாக சில காலங்களாக விசாரணை நடத்தி அதன் அடிப்படையில் கைதுகள் மேற்கொளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் கடத்திய பல வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 22 வயதான கோடி வொட்ஸ், 28 வயதான பிராண்டன் /ஹன்டன் மற்றும் 24 வயதான சவான்னா ச்சேவாஸ் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவங்களுடன் இந்த சந்தேக நபர்கள் வேறு கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தால் அது குறித்து அறிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.






# கனடாவில் கடத்தல் சம்பவம் சந்தேகநபர்கள் மூவர் கைது

கனடாவில் கடத்தல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய சந்தேக சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் மார்க்கம் பகுதியில் வைத்து நபர் ஒருவர் கடத்தப்பட்டி ருந்தார்.

மார்க்கம் கொமர்ஷியல் பிளாசா பகுதிக்கு அருகாமையில் நின்றிருந்த நபர் இவ்வாறு கடத்தப்பட்டிருந்தார்.

மேற்படி நபரை மூன்று பேர் பல வந்தமாக வாகனம் ஒன்றில் கடத்திச் சென்றிருந்தனர் என தெரிவிக்கப் படுகிறது.

கடத்தல் சம்பவம் இடம்பெற்று 24 மணித்தியாலத்திற்குள், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவத்தில் கடத்தப்பட்ட நபர் சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில் மீட்கப்பட்டிருந்தார்.

என்ன காரணத்திற்காக இந்த நபர் கடத்தப்பட்டார் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப் படவில்லை.

29, 19 மற்றும் 22 வயதான மூன்று பேர் இந்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்பு பட்டிருப்பதாக தெரிவிக் கப்படுகிறது.



# காதல் வலையில் வீழ்ந்த மூதாட்டிக்கு நேர்ந்த கதி

வயோதிப பெண் ஒருவர் காதல் வலையில் சிக்கி பணத்தை இழந்த சம்பவமொன்று கனடாவில் பதி வாகியுள்ளது.

இந்த மோசடி சம்பவத்தில் குறித்த வயோதிப பெண் இருபதாயிரம் டொலர்கள் இழக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நியூபவுண்ட்லாண்ட்டைச் சேர்ந்த 77 வயதான எலானி ஹார்னும் என்ற பெண்ணே இந்த மோசடியில் சிக்கி பணத்தை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தந்தையை இழந்த தமது தாய் தனிமையில் வாழ்ந்து வந்ததாகவும் அண்மையில் புற்று நோய் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் குறித்த பெண்ணின் இரண்டு மகள்களும் தெரிவித்துள்ளனர்.

முகநூல் ஊடாக குறித்த வயோதிப் பெண்ணை ஒரு வர் ஏமாற்றி 20000 டொலர்கள் வரையில் பணத்தை மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரம்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சடலம் சந்தேகத்திற்கிடமான வகையில் காணப் படுவதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒருவருக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இதன்போது, அந்த இடத்தில் ஒருவர் அசைவற்று இருந் தாகவும், அவர் சில நிமிடங்களில் உயிரிழந்து விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் ஆள் அடையாள விபரங்கள் வெளி யிடப்படவில்லை. உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனையின்



பின்னரே மேலதிக தகவல்களை வெளியிட முடியும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.